TNPSC JOB

V7T

**விருதுநகர் மாவட்டம்**

**தொகுத்தறித் தேர்வு - டிசம்பர் 2025**

*****

**வகுப்பு 7**

கால அளவு: 2.00 மணிநேரம் **தமிழ்** மதிப்பெண்கள்: 60

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **10×1=10**

**அ) சரியான விடையைத் தேர்வு செய்க**

1) முற்காலத்தில் இந்திய மக்கள் துன்பப்பட்டதற்குக் காரணம் .............. இல்லாமை
   அ) விளையாட்டு ஆ) கல்வி இ) கலைகள் ஈ) முயற்சி
2) 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர் ........
   அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர் இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்
3) எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் ..........
   அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல்
4) முடிச்சிட்டால் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) முடிச்சி + இடல் ஆ) முடிச்சி + சிட்டால்
   இ) முடிச்சு + இட்டால் ஈ) முடிச்சி + இடல்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக**

5) கருத்துப்படங்களை அறிமுகப்படுத்தியவர் .............
6) கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது .............

**இ) பொருத்துக**

| | | |
|---|---|---|
| 7) | திரிசொல் | - முதல்நிலைத் தொழிற்பெயர் |
| 8) | பிடி | - காகம் |
| 9) | உயிர்க்குக் கண்கள் | - அழுவம் |
| 10) | கரவா கரைந்துண்ணும் | - எண்ணும் எழுத்தும் |

## பகுதி - II

**ஈ) ஓரிரு சொற்களில் விடையளிக்க. (ஏதேனும் ஐந்து மட்டும்)** **5×2=10**

11) இந்திய நாடு எவற்றில் சிறந்து விளங்கியது?
12) மனிதப் பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?
13) இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?
14) மலர்கள் எப்போது தரையில் நழுவும்?
15) சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக
16) முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக
17) துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?

**உ) ஓரிரு தொடர்களில் விடை தருக. (ஏதேனும் மூன்று மட்டும்)** **3×4=12**

18) கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக
19) மக்கள் குறையில்லாமல் வாழ, தேயிலைத் தோட்டப் பாட்டு கூறும் வழி யாது?
20) கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக
21) பூக்களைக் கொய்யும் போது உங்கள் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை எழுதுக
22) தந்த ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுவது ஏன்?

Scanned with OKEN Scanner

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB



## பகுதி - III

ஊ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. 5×2=10

24) **பின்வரும் தொடர்களில் பொருத்தமான இடங்களில் 'ஆல்' என்னும் உருபைச் சேர்த்து எழுதுக**

அ) அறிஞர் அண்ணா தமது பேச்சுவன்மை மக்களைக் கவர்ந்தார்

ஆ) மற்றவர்களுக்கு என் முடிந்த உதவிகளைச் செய்வேன்

24) **ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக**

அ) ......... சுடும்

ஆ) .......... பேசும்

25) **பின்வரும் சொற்களை இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக**

அ) ஆறு -

ஆ) இடி -

26) **படிப்போம்; பயன்படுத்துவோம்!**

அ) Moral -

ஆ) Modern Art -

27) **இடைச்சொல் 'கு' சேர்த்துத் தொடரை எழுதுக**

அ) பாட்டு பொருள் எழுது

ஆ) செடி பாய்ந்த நீர்

28) **கொடுக்கப்பட்டுள்ள சொற்களை ஒரு தொடரில் முதல் மற்றும் இறுதிச்சொல்லாகக் கொண்டு சொற்றொடர் உருவாக்குக**

அ) இசை -

ஆ) வண்ணங்கள் -

29) உன் பொறுப்புகள் இரண்டு எழுதுக

## பகுதி - IV

எ) **பின்வரும் கவிதைப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக** 4+2=6

30) வைப்புழிக் ............ எனத் தொடங்கும் 'அழியாச் செல்வம்' பாடலை எழுதுக

31) எண்ணித் ......... எனத் தொடங்கும் குறளை எழுதுக

## பகுதி - V

ஏ) **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க.** 1×6=6

32) மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக

33) நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால், வள்ளுவர் கோட்டம் / திருவள்ளுவர் சிலை போன்றவற்றைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?

ஐ) **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க.** 1×6=6

34) **கடிதம் எழுதுக**

உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துதர வேண்டி பொதுநூலக இயக்குநருக்குக் கடிதம் எழுதுக.

35) **கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக**

**<u>எங்கள் ஊர்</u>**

[முன்னுரை - அமைவிடம் - பெயர்க்காரணம் - தொழில்கள் - சிறப்பு மிகு இடங்கள் - திருவிழாக்கள் - மக்கள் ஒற்றுமை - முடிவுரை]

- - - - -

TNPSC JOB | www.tnpscjob.com

Scanned with OKEN Scanner